சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

வழக்கு எண்.ஓ.எஸ்.109/2015

2018ம் ஆண்டு திங்கள் ம் நாள் வாதியின்/ பிரதிவாதியின் மனுதாரரின்/எதிர்மனுதாரரின் PW.1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு/திருமதி.கலாவதி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர் சேகர் தொழில்

தந்தை/கணவர் பெயர் சமயம்

கிராமம் சாதி

தாலுகா வயது

<u>குறுக்கு விசாரணை</u> (3, 4, 7 பிரதிவாதிகள் தரப்பில்)

05.09.2018 - தாவா சொத்தில் எனக்கும், 1, 2 பிரதிவாதிகளுக்கும் பங்கு இருக்கிறது. நானும், 1, 2 பிரதிவாதிகளும் உடன் பிறந்தவர்கள். நேசமாக இருக்கிறோம். ஞானமணி வயல்சேரியில் இருக்கிறார். நானும், செல்லச்சாமியும் மதுரையில் இருக்கிறோம். பிராது போடும் காலத்தில் நாங்கள் நேசமாக இருந்தோம். அப்போது 3 பேரும் சேர்ந்து பாகப்பத்திரம் எழுதிக்கொள்ள வாய்ப்பிருந்தது. 4ம்பிரதிவாதி என் சொத்தையும் சேர்த்து பத்திரம் போட்டதால் வழக்கு போட்டேன். 1, 2 பிரதிவாதி சொத்தையும் சேர்த்து தான் பழனிச்சாமி பத்திரம் போட்டார். அவ்வாறு இருக்கையில் 1, 2 பிரதிவாதிகள் ஏன் என்னுடன் வாதியாக வரவில்லை என்பதற்கு காரணம் சொல்ல இயலாது. பிராதில் உள்ள எந்த சொத்தையும் நான் அனுபவிக்கவில்லை. 1994லிலிருந்து தாவா சொத்துக்களை நான் அனுபவிக்கவில்லை. 1ம் பிரதிவாதி எந்தெந்த சொத்தை அனுபவிக்கிறார் என்று சொல்லமுடியாது. 2ம் பிரதிவாதி எந்தெந்த சொத்தை அனுபவிக்கிறார் என்று சொல்லமுடியாது. 4ம் பிரதிவாதி தான் தாவா சொத்துக்கள் அனைத்தையும் அனுபவித்து வருகிறார். 4ம் பிரதிவாதி வாதி சொத்தில் பாகஸ்தர் அல்ல. 1994லிலிருந்து தாவா சொத்துக்களை 4ம் பிரதிவாதி தான் அனுபவிக்கிறார். 4ம் பிரதவாதியிடமிருந்து சொத்தை வரப்பெற்றுவதற்காக நான் முயற்சி எடுக்கவில்லை. என் சித்தப்பா போஸ் என்பவருக்கு அவர் இறக்கும்போது குழந்தைகள் இல்லை. போஸ் இறந்தது

1968ம் ஆண்டு. போஸ் இறந்ததற்கு இறப்பு சான்றிதழ் இல்லை. 4ம் பிரதிவாதி பெயரில் சொத்தை எழுதி வைத்ததற்காக கார்த்திகை செல்வி, பழனிச்சாமி மீது நில மோசடி பிரிவில் புகார் செய்தேன். அந்த புகார் மனுவில் நானும், ஞானமணியும் கையெழுத்து போட்டுக்கொடுத்தோம். அசல் மனு நில மோசடி பிரிவு போலீசில் இருக்கிறது. அதன் உண்மை நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது. கமலம் என்பவருக்கு சுரேஷ் என்ற மகன் இருப்பதாக பிராதில் கூறியிருக்கிறேன். வம்சா வழி ஜாபிதாவில் ரமேஷ் என்று காட்டியிருக்கிறேன். பிராது தாக்கல் செய்யும் காலத்தில் கமலத்திற்கு ரமேஷோ அல்லது சுரேஷோ பிறந்தது எனக்கு தெரியாது. அதனால் வழக்கில் சேர்க்கவில்லை. பி.வா.சா.ஆ.1 ஐ நானும், ஞானமணியும் எங்களுடைய சுய விருப்பத்தின் பேரில் யாருடைய கட்டாயமும் இல்லாமல் கொடுத்தோம். இந்த மனுவில் கார்த்திகை செல்வி என்பவர் போஸ் என்பவருக்கு பிறந்தவர் என்று சொல்லிவிட்டு தற்போது மாற்றிச்சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. கமலம் என்பவர் ஏழுமலை என்பவரை திருமணம் சட்டப்படி செய்தாரா என்பது தெரியாது. அவர்கள் குடும்பமாக வாழ்ந்தார்கள் என்பதற்கு ரிக்கார்டு இல்லை. ஏழுமலைக்கும், கமலத்திற்கும் குழந்தை பிறந்ததாக பிறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. கார்த்திகை செல்வி ஆசிரியை வேலை செய்கிறார். கார்த்திகை செல்வியின் பள்ளி பதிவேடு, பணிப்பதிவேடு ஆகியவற்றில் போஸ் என்பவர் பெயர் தந்தை என்று காட்டப்பட்டுள்ளது என்றால் அரசாங்கத்தை ஏமாற்றி போட்டிருக்கிறார்கள். என் சித்தப்பாவுக்கு குழந்தை இருந்தால் அவருக்கு பாதி பாகம் கிடைக்கும், எங்கள் மூன்று பேருக்கும் பாதி பாகம் கிடைக்கும் என்றால் சரிதான். பட்டா என்னுடைய தாத்தா சுப்பிரமணியத்தேவர் பெயரில் இருந்தது. என் சித்தப்பா பெயரில் இருந்த சொத்துக்களை கார்த்திகை செல்வி பெயருக்கு பட்டா மாற்றியிருக்கிறார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.12ல் உள்ள சொத்து எங்கள் சொத்து அல்ல. போதும்பொன்னுவும் நானும் பேசிக்கொள்ளமாட்டோம். கதிரேசனின் மனைவி தான் போதும்பொன்னு. சீதாமணி என்பவர் கதிரேசனின் அண்ணன் மனைவி ஆவார். அந்த பத்திரத்தில் நானும் சாட்சி கையெழுத்து போட்டிருக்கிறேன். இந்த சொத்து சம்பந்தமாக

போதும்பொன்னுவுக்கும், கார்த்திகை செல்விக்கும் முன்சீப் கோர்ட்டில் வழக்கு நடக்கிறது என்றால் சரிதான். போலியான பத்திரம் தயார் செய்வதற்கு சீதாமணி, கதிரேசன், போதும்பொன்னுவுக்கு உடந்தையாக நான் இருந்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 என்பது கார்த்திகைசெல்வி பழனிச்சாமிக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் ஆகும். அதற்கு நகல் எடுத்தவர் 5ம் பிரதிவாதியான கதிரேசன் ஆவார். நானும், 5, 6 பிரதிவாதிகளும் கூட்டுச்சதி செய்து இந்த வழக்கை நடத்துவதாக சொன்னால் சரியல்ல. கதிரேசன் போதும்பொன்னுவுக்கு எழுதிக்கொடுத்த சொத்தினை கிரயம் வாங்கியது என்னுடைய தாத்தா சுப்பிரமணியதேவர் ஆவார். அவர் கிரயம் வாங்கியது வா.சா.ஆ.3 ஆகும். 5ம் பிரதிவாதியான கதிரேசனின் தகப்பனாரிடமிருந்து என் தாத்தா சுப்பிரமணியதேவர் கிரயம் வாங்கினார். 5ம் பிரதிவாதியை மைனராக காண்பித்து வா.சா.ஆ.3 பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்பதால் 5ம் பிரதிவாதி பின்னர் அதில் உரிமை கொண்டாட முடியாது என்றால் சரிதான். அவ்வாறு உரிமை இல்லாத சொத்தை மோசடியாக எழுதிக்கொடுத்த பத்திரத்தில் நான் சாட்சியாக கையெழுத்து போட்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த சொத்துக்கு கணினி பட்டா வா.சா.ஆ.2 ஆகும். அது என் தாத்தா சுப்பிரமணியதேவர் பெயரில் உள்ளது. அந்த சொத்துக்களுக்கு தீர்வை ரசீது போட்டேன். ஆனால் அனுபவம் செய்யவில்லை. தாவா சொத்துக்களுக்கு நான்குமால்கள் எனக்கு தெரியும். சர்வே நம்பர்கள் ஒரு சில சொத்துக்களுக்கு தெரியும். பிராதில் 1 முதல் 14 இலக்க சொத்துக்களுக்கு நான்குமால்கள் குறிப்பிடவில்லை. பிராதில் உள்ள் 1 முதல் 14 இலக்க சொத்துக்களுக்கு உரிய சர்வே நம்பர்களில் சர்வே நம்பரை மட்டும் சொன்னால் அதற்கு நான்குமால் சொல்ல இயலாது. கமலம்மாளுக்கு வேறு திருமணம் நடக்கவில்லை என்றும் போஸ் தான் ஒரே கணவர் என்றும் அவருக்கு பிறந்தவர் தான் கார்த்திகைசெல்வி என்றும் சொன்னால் சரியல்ல. ஏழுமலையுடன் கமலம் குடும்பம் நடத்தியதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் 2010ம் ஆண்டு சுப்பிரமணியதேவர் அவருடைய சொத்துக்களை வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டு விட்டது என்றால் சரியல்ல. கார்த்திகைசெல்வி ஒரு தரப்பாகவும், நாங்கள்

அண்ணன் தம்பி மூவரும் ஒரு தரப்பாகவும் இருந்து பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. அந்த பாகத்தில் 1, 2 பிரதிவாதிகளுக்கு சர்வே நம்பர்கள்.15/1ஏ, 24/26, 24/27, 7/1, 66/34, 85/7 ஆகிய சொத்துக்கள் எங்கள் பாகத்திற்கு கிடைத்தது என்றால் நாங்கள் அவரவர் நேரம் கிடைக்கும்போது சொத்துக்களை பார்த்துவருவோம். 16, 17 இலக்க சொத்துக்களை நான் கதிரேசனிடம் ஒப்படைத்து விட்டேன். அதில் எங்களுக்கு பாகம் இல்லை. அந்த வீடுகளுக்கு பதிலாக சர்வே நம்பர்.26/16 என்ற சொத்து கொடுக்கப்பட்டு அதில் கார்த்திகைசெல்வி வீடுகட்டி குடியிருந்து வருகிறாரா என்றால் சரியல்ல. கார்த்திகைசெல்வி வயல்சேரியில் குடியில்லை. திம்மாபுரம் சுப்பையா தேவர் மகன் கருப்பசாமியை தெரியும். அவர்தான் பாகம் பிரித்து கொடுத்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு பாகம் பிரிக்கப்பட்டதில் 27/16ல் உள்ள ஓட்டுவீடும் மற்றும் எதிர் வழக்குரையில் சொல்லப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் கார்த்திகைசெல்விக்கு ஒதுக்கப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. அவ்வாறு பாகம் கிடைத்ததில் சில சொத்துக்களை 3ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு தானபத்திரம் எழுதியுள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு கிடைத்த பாகத்தின் படி அவர்கள் பெயரில் பட்டா வாங்கிவிட்டார்கள் என்றால் சரியல்ல. பேச்சியம்மாள் எங்களுடன் பேசிக்கொள்வார். பேச்சியம்மாள் தனக்கு சொத்து வேண்டாம் என்று கோர்ட்டுக்கு எழுதி அனுப்பிவிட்டார். 3ம் பிரதிவாதி பாகஸ்தர் என்ற அடிப்படையில் வழக்கில் சேர்க்கவில்லை, 3ம் மனிதராக சேர்க்கப்பட்டுள்ளார். பாகம் பிரிக்கப்படவில்லை என்று சொன்னால் கூட 3ம் பிரதிவாதிக்கு பாதிப்பாகம் கிடைக்கக்கூடியது என்றும் அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும். வழக்கு போடும் போது கைவசம் உள்ள சொத்துக்களை எல்லாம் வழக்கில் சேர்த்து விட்டேன். வேறு சொத்துக்கள் இல்லை. 1, 2 பிரதிவாதிகளுக்கு வழக்கு நடத்த விருப்பம் இல்லை என்றும், அவர்களுக்கு கிடைத்த பாகத்தை அனுபவித்து வருவதால் அவர்கள் வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 4ம் பிரதிவாதியிடம் சுவாதீனம் கேட்க பரிகாரம் இல்லாத நிலையில்

தாவா வழக்கு சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல,

<u>மறுவிசாரணை</u>

இல்லை